அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை!

# இலத்தூர் தெற்கு ஒன்றிய சட்டத்துறை பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

## ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.எஸ்.பாபு அறிக்கை!

காஞ்சிபுரம், ஆக.9,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் தெற்கு ஒன்றியம் - கழக சட்டத்துறை DLC-CLC-TLC-DivLC-FLC மற்றும் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம் இன்று (9.8.2025-சனிக்கிழமை) பிற்பகல் 12 மணியளவில் பி.ஆர்.மஹால், செய்யூரில் நடைபெறுகின்றது.

இக் கூட்டத்தில் மண்டலப் பொறுப்பாளர், அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆகியோர்சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் க.செல்வம் எம்.பி., எஸ். டி.இசை, ப.அப்துல் மாலிக், டாக்டர் ஆர்.டி. அரசு, ஆர்.தசரதன், சுபலட்சுமி பாபு, கிருஷ்ணவேணி தணிகாசலம், மு. மோகன்தாஸ், ம.மணி, க.அர்ச்சுணன், ஜெயலட்சுமி மகேந்திரன், ஜெ. மகாகணபதிராமன், எஸ். டில்லிபாபு, ஏ.வெங்கடேசன், ஆர்.பன்னீர் செல்வம், த. பாபு, மு.தணிகாசலம், ஆர்.இராமமூர்த்தி, பி.சுரேஷ், எஸ்.வி. மகேந்திரன், சத்திய பாமா புருசோத்தமன், ஜி.எம்.முனுசாமி, எஸ்.ஜானகிராமன், எம்.பி. கதிரவன், கே.சுதாகர், வி.செல்வ குமார், பி.சுகன்யா, செ. தென்னகசெல்வன், மோ. தமிழ் மாறன், ஆர்.கார்த்தி, எம். செந்தில், எம்.கே. வெங்கடேசன், என்.கார்த்திகேயன், காந்திமதிரமேஷ், புனிதா கோவிந்தராஜ், டி.செல்வக்குமார், எம்.இ.தம்பிதுரை, என். பொற்செல்வன் மற்றும் ஒன்றிய அணிகளின் துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள், பாகநிலை முகவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.எஸ்.பாபு அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கொள்ளானூர் கிராமத்தை வெங்கடசுப்பன் என்பவரின் மனைவி தேவனையம்மா வயது 70 மூதாட்டியான இவருக்கு காது கேட்காத நிலையில் உள்ள இவர் காதுகேட்கும் கருவி வேண்டும் என கோரிக்கையை தொடந்து முன்னாள் மாவட்ட செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன் தன்னுடைய சொந்த செலவில் காதுகேட்கும் கருவி வழங்கினார். உடன் மு.மணிபாலன், எஸ்.உதயகுமார், அங்கமுத்து, சரவணன், கே.என்.பழனி, கே.எஸ்.டி.தமிழ்செல்வன், கே.வி.நாகராஜ் ஆகியோர் உள்ளனர்.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் – சென்னை மேற்கு

# மாவட்ட இலக்கிய அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் மு.சீனிவாசன் அறிக்கை!

சென்னை, ஆக.9-

மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில், சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணியின் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என மாவட்ட அமைப்பாளர் மு.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணியில் புதியதாக நியமிக்கப்பட்ட அனைத்துப் பகுதி நிர்வாகிகள், அறிமுகக் கூட்டம், இன்று (09082025 - சனிக்கிழமை) மாலை, 06.00 மணியளவில், நுங்கம்பாக்கம், காம்தார் நகர் முதல் தெருவில் அமைந்துள்ள சென்னை மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு தலைமையில், மாவட்ட இலக்கிய அணி நிர்வாகிகள் முன்னிலையில், சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணிக்கு, புதியதாக நியமிக்கப்பட்டுள்ள அண்ணா நகர் வடக்கு, அண்ணா நகர் தெற்கு, ஆயிரம் விளக்கு கிழக்கு, ஆயிரம் விளக்கு மேற்கு, சேப்பாக்கம் மற்றும் திருவல்லிக்கேணி நிர்வாகி களின் அறிமுகக் கூட்டம், நடைபெறுகிறது.

எனவே சென்னை மேற்கு மாவட்டத்திலுள்ள மாவட்ட, மற்றும் பகுதி இலக்கிய அணி நிர்வாகிகள் அனைவரும், தவறாமல் கலந்துகொன்டு, கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுமாய் சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணியின் அமைப்பாளர் மு.சீனிவாசன் கேட்டுக்கொள்கிறார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு 123 வது வட்டக் கழக செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம் சி. முன்னலையில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் த.வேலு எம்.எல்.ஏ. கலைஞர் அவர்களின் திருஉருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து அறுசுவை உணவு ஏழை எளிய மக்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

ஆர்.எம்.மணிகண்டன் ஏற்பாட்டில் – முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு தினம்!

# திருவொற்றியூர் பெரியார் நகரில் மலரஞ்சலி! அறுசுவை உணவு!

## இரா.முருகேசன் வழங்கினார்! ஆர்.டி.மதன்குமார் – எழும்பூர் கோபி முன்னிலை!

சென்னை, ஆக.9-

சமூக நீதிக் காவலர், தமிழகத்தின் சிற்பி, தலைவர் கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் பெரியார் நகரில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர். எம்.மணிகண்டன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப் பட்டது.

தலைமைப் பொதுக் குழு உறுப்பினர் இரா. முருகேசன் தலைமையில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன் குமார் மற்றும் தலைமைக் கழகப் பேச்சாளர் எழும்பூர் கோபி ஆகியோர் முன்னிலையில் பொதுமக்கள் ஆயிரம் பேருக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இதில் மாவட்ட சிறுபான்மை நலப்பிரிவு துணை அமைப்பாளர் எச்.ஜெகன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு துணை தலைவர் ஏ.ஜி.தேவராஜ், மதிமுக நகரத் துணைச் செயலாளர் என்.ரகு, ஆர்.சி.செந்தில்குமார், வெங்கட், மனோஜ் (எ)தமிழ்மாறன், டி.கே.சிவ. சூர்யா, சமத் பாஷா, எம். சதீஸ், அப்துல், பாட்ஷா, மற்றும் கழக இளைஞரணித் தோழர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு ஆலோசனைப்படி மாவட்ட கழக துணை செயலாளர் கோடம்பாக்கம் மு.சத்யா தலைமையில் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது நிகழ்ச்சியில் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் கே. ஏழுமலை எம்.சி,வட்ட செயலாளர் நா.மோ முரளி மற்றும் கா.சந்துரு, எம்.ராமச்சந்திரன், எஸ்.விஜயன்,சுந்தர் பிலிப்,சாந்தி, செந்தில்,சங்கர், தங்கராஜ்,விவேக் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

